வெளியீடு 2

உ

சிவமயம்



திருவள்ளுவர் செந்தமிழ்ப் பாட்டசாலை



# திலகவதியார்



குகன் பிரஸ், காஞ்சிபுரம்.

1946

உ
சிவமயம்



மெய்கண்டார் கழக ஆசிரியர்

பொன். குமாரசுவாமி அடிகள்

காஞ்சிபுரம்.

உ

சிவமயம்

# திலகவதியார்

இது
ஐயன்குளம் திரு. சி. ரா. சண்முக முதலியார்
திருமதி. சுந்தரம்மையார் இவர்கள் புதல்வியும்
காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக மாணவியுமான

**செயலக்குமியம்மையார்**

திருவேகம்பர் பெருவிழாவில்
ஆயிரக்கால் மண்டபத்திற் செய்த

## சொற்பொழிவின் குறிப்பு

---

*சிந்தாதிரிப்பேட்டை* நைனியப்பமுதலியார் தெரு திருவாளர்
தேனம்பாக்கம். வேங்கடாசல முதலியார் குமாரர்
**கந்தசாமி முதலியார் அவர்கள்**
பொருளுதவியால்

*மெய்கண்டார் கழக ஆசிரியர்*
**பொன். குமாரசுவாமி அடிகளவர்களால்**

குகன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

1946

உ

சிவமயம்

# திலகவதியார்

அன்பர்களே அடியேன் பேச எடுத்துக் கொண்ட விஷயம் திலகவதியார் என்பதாகும்.

அம்மையார் அவதரிக்கத் தவஞ் செய்த நாடு நடு நாடாகும். தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ் விலாச் செல்வருஞ் சேர்வது நாடு. ஒரு நாட்டிற்குக் குறைவில்லாமல் விளைபொருளை விருத்தி செய்பவரும் அறவோருங் கேடில்லாச் செல்வருஞ் சேர்ந்து வாழ் வதே நாட்டிற்குப் பேரழகாகும். மற்றும் பசியும் நோயும் பகையும் இல்லாமலிருப்பதும் நாட்டிற்கழ காகும்.

தன் கண் வாழ்வார்க்கு வருத்தத்தைத் தராமல் தேடி வருந்தாமல் தானேயடையும் செல்வத்தை யுடையதனை நூலோர் நாடென்று சொல்வர். நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாடவளந்தரு நாடு என்றனர் பொய்யில் புலவர்.

அன்பர்களே அம்மையார் அவதரித்த புண்ணிய மிக்க நடுநாடு ஔவை யெம்மன்னை அருந்தமிழ் அமுதப் பாடலுக்கு நெய்யாகவும் பாலாகவும் பெருகி வளம்பெற்ற பெண்ணை நதியையுடையதும் பொய்கை யாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் இவர்கள் நடுவில் திருமால் நெருங்கி நின்று தரிசனமளித்ததும் திருமாலாதி தேவரும் நான்கு வேதமும் தேடிக் காணு இறைவனைக் கண்டு வழிபட்டுத் தெய்வத் திரு நெறித் தமிழ் மறையைப் பாடியருளிய அருளாசிரி யர்கள் மூவரில் இருவர் அவதரித்ததும் இந்நாடே யாம்.

பாவருந் தமிழாற்பேர் பெறுபனுவல் பாவலர் பாதிநாளிரவில்<br>
மூவருந்தொழுது மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு<br>
தேவருமறையு மின்னமுங் காணுச் செஞ்சடைக் கடவுளைப் பாடி<br>
யாவருமதித்தோர் மூவரில் இருவர் பிறந்த நாடிந்த நன்னாடு.

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைதிகழ்<br>
அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்<br>
பிறந்தருள வுளதானல் நம்மளவோ பேருலகில்<br>
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு.

எனப் புகழ்ந்து பேசியுள்ளார்கள். இதுவல்லா மல் சந்தான குரவர் மூவர் அவதரித்ததும் சமய குர

வர்களால் பாடல் பெற்ற இருபானிரண்டு சிவதலங் களையுடையதுமாகிய இந்நடுநாட்டிலே சிவம் பெருக் கும் திருவாமூரிலே வேளாண் மரபிலே குறுக்கையர் குடிமிகச் சிறப்புற்று விளங்கிற்று அக்குடியின் தலைவராகிய புகழனார் என்பவர் வாழ்ந்து வந்தனர்.

பூண்ட பெயருக்கேற்ப அவர் புகழ் பல திசை யினும் பரவியது. தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதற்கிலக்கியமாயினர். தம்போல் குணம் குடிமை முதலியவற்றிற் சிறந்த மாதினியாரை மணந்தனர் அம்மையார் பெயர் மாதினியார் மாதர் களுக்குள் இனிமையுடையவராயும் அவருக்குப்பின் அவ்வூரில் சமயகுரவருள் ஒருவராய் நிற்போரும் அவரை நிறுத்துவோருமாகிய இரு சைவப் பெருமக் களை உலகிற்குத் தந்தமையால் மாது இனியார் என்று உலகஞ் சொல்லத் தக்கவராயும் இருந்தனர்.

சிவநெறியில் வழுவின்றி யொழுகும் புகழனார். இல்லற நெறியில் நின்று அன்பும் அருளுந் தாங்கி இன் சொலின் விருந்து புறந்தந்து பெண்ணிற் பெருந் தக்கயாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின் தெய்வந் தொழாள் கொழுநற்றொழுதெழு

வாள் பெய்யெனப் பெய்யும் பெருமழையென்பதற் கிலக்கியமாயுள்ள மாதினியாரோடு,

பிச்சையும் ஐயமுமிட்டுப் பிறன்றாரம்
நிச்சலும் நோக்காது பொய்யொரீஇ நிச்சலும்
கொல்லாமை காத்துக் கொடுத் துண்டு வாழ்வானேல்
இல்வாழ்க்கை யென்னும் இயல்பு.

என்பது அறநெறிச்சாரம் இவ்வறநெறி நின்று புகழனார் வாழ்ந்து வந்தனர். வாழுநாள் செல் விருந்தோம்பி வருவிருந்தெதிர் கொள்ளுமிவர்கள் மங்கலமேன்ப மணைமாட்சி மற்றதன் நன்கலன் நன் மக்கட்பேறு. பெறுமவற்றுள்யாமறிவதில்லை அறி வறிந்த மக்கட்பேறல்ல பிற என்பதற்கிணங்க நற் குணப்பெண் மகவு ஒன்றைப் பெற்றனர். அக்குழ விக்குத் திலகவதியாரென்று பெயர் சூட்டினர் பின்பு மாதினியார் மணிவயிற்றில்,

திலகவதியார் பிறந்து சிலமுறை யாண்டகன்ற தற்பின்
அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வருமிருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்.

அன்பர்களே திலகவதியார் பிறந்து சில ஆண்டு கள் கழிந்தபின் பல கலைத்துறை தழைப்பவும் அருந்

தவத்தோர்களது தவநெறி வாழவும் புற இருள் நீக்குங் கதிரவன்போல் மக்களது மன விருளை யோட்ட வந்தவதறித்த குழவிக்குப் பிள்ளைத் திரு நாமமாக மருணீக்கியார் என்று பெயரிட்டனர். இப் பெயர் மிகவும் வாய்ப்புடையதே அவ்வப் பருவத் துக்குரிய மங்கலச் சடங்குகள் சுற்றத்தாரும் ஊரவ ரும் மகிழப் பெற்றோர்கள் பெரும்பொருள் செல வழித்துச் செய்தனர்.

அறப்பயனுந் தாஞ்சிறிதாயினுந் தக்கார் வாய்ப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்துவிடும் தக் கார்க்கே ஈவர் என்பதற்கிணங்கத் தக்கவர்க்குத் தானங்கள் வழங்கினார்கள். இளங்குழவிப் பதங் கடந்த மருணீக்கியாருக்குப் புகழனார் சிகை வருவித் தல் முதலிய சடங்குகள் நடத்தியபின் கலை பயிலத் தொடங்குவித்தார். ஒருமைக் கட்டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையுமே மாப்புடைத்து ஆக லின் முன்பு செய்தவத்தின் ஈட்டத்தால் மருணீக்கி யார் நூல்களை எளிதிற் பயின்றார். மக்களின் அறிவு வளர்ச்சியும் கலை பயில் தெளிவுங்கண்ட தாய் தந்தை யர் ஈன்றபொழுதினும் மிகவுவப்புற்றனர். களங்கம் நீங்கிய கலை மதிபோல் வளர்கின்றார்கள். திலகவதி யார்க்கோ ஆண்டு பன்னிரண்டு முன்னாக இருமுது

குரவரும் அம்மையாரது திருமணங் கருதியிருந்தனர் அரசர் சேனதிபதியாங் கலிப்பகையார் அவ்வம்மையை மணம் புணர விரும்பியெழுங்காதலால் பெண் பேச மேலோரைச் செலவிட்டார். சென்றமுதியோர் புகழனரைக் கண்டனர். புகழனர் அன்புடன் வரவேற்று அளவளாவிக் குணங் குலம் இறைவன் பாலன்புடைமை ஆதியதேர்ந்து சுற்றத்தாரோடுஞ் சூழ்ந்து கலிப்பகையார்க்கு மகளைக் கொடுக்க வுடன்பட்டனர். இசைந்தமை கேட்டு மகிழ்வடைந்த கலிப்பகையார் மணம் நிகழுமுன் வடபுலத்தரசரோடு போர் செய்ய அரசனல் அனுப்பப்பட்டார் போர் நெடுங்காலம் நிகழ இடையில் புகழனர்,

குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

நீரில் எழுத்தாகும் யாக்கை என்றபடி தொன்று தொட்டு வரும் நிலையாமை மேவிய வினைப்பயனல் நோய் வாய்ப்பட்டு மண்ணுலகை விடுத்து விண்ணுலகை யடுத்தனர். மாதினியார் கணவரைப் பிரிந்தமையால் கலங்கித் துணையிழந்த அன்றிலெனத் துடித்துச் சுற்றத்தாரையும் மக்களையுந் துகளாகவே நீத்து, என்றும் பிரியாத கற்பு நெறியால் உயிர்விடுத்

துக் கணவனுரைப் பின்பற்றிச் சென்றனர். கற்புடைய பெண்களின் செயலை நமது கச்சியப்ப சிவாசாரியர் தாமியற்றிய கந்த புராணத்தில் சூரபத்மன் இறந்தானென்ற மொழியைக் கேட்டபோதே பதுமகோமளை உயிர் நீத்தாள் என்று,

காவன் மன்னவனிறந்தன னெனுமுரை கன்னத்துள்
மேவுமெல்லையில் அசனியேறுண்ட வெம்பணியேபோல்
தேவியாகிய பதுமகோமளை யெனுந் திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளி யாகியதது வன்றே.

என்று அழகாகக் கூறியுள்ளார்.

அன்பர்களே புகழனும் மாதினியாரும் பிரிந்தபின் தாய் தந்தையரை ஒருங்கே யிழந்தமையானும் இன்பமாய் வளர்க்கப்பட்ட இளஞ்சிறுர்களாதலானும் பேதுறு நற்சுற்றமொடும் பெருந்துயரில் அழுந்தினுர்கள். பின்னர் உறவினர் தேற்ற ஒருவாறு மனந்தெளிந்து பெருவானம் அடைந்தவர்க்குச் செய்கடன்கள் பெருக்கினுர்கள்.

போரிற் சென்ற கலிப்பகையார் சின்னுளில் பகைவராகிய கடல்போன்ற சேனையை வென்று முடிவில் போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டனர். கலிப்பகையார் போரில் உயிர் கொடுத்த வார்த்தை திலகவதியம்மையார் செவியின்

அருகணைந்தது கேட்ட அம்மையார் எந்தையும் எம் அன்னையும் அவர்க்கு என்னைக் கொடுக்க இசைந் தனர்கள். அந்த முறையால் நான் அவர்க்கே உரிய தாகலின் என் உயிரை அவரோடு இசைவிப்பன் என உயிர்விடத் துணிந்தனர்.

பெரியோர்களே தாய்மார்களே இங்கு அம்மை யார் அருஞ்செயலை எண்ணினால் அவர் பெருமை நன்கு புலனும். திலகவதியார் தாய் தந்தையர் மறைந்த பின்னும் அவர்கள் கருத்தே தம் வாழ்க் கைக்கு மூலமெனத் துணிந்து தம்மைக் கொள்ள விருந்த கலிப்பகையார் போரில் உயிர்விடத் தாமும் உயிர்விடத் துணிந்தனர். இதனால் தந்தைசொன் மிக்க மந்திரமில்லை என்றும் ஔவையெம் அன்னை அமுதமொழிக்கு இலக்கியமிவரன்றோ. உயிர்விடத் துணிந்த தமக்கையாரின் நிலைகண்ட மருணீக்கியார் அவரடியிணைமேல் வீழ்ந்து அன்னையும் அத்தனும் அகன்ற பின்னையும் நான் உமை வணங்கப் பெறுதலி னால் உயிர் தரித்தேன் என்னைத் தனியாக விட்டேகுவி ராயின் உமக்கு முன்னம் உயிர் நீப்பேன் என மொழிந்து இடரில் அழுந்தினர். முன்னம் அம்மை யாரின் உயர்ந்த போக்கை அறிந்தோம். அடுத்து அவர் தம்பியாரின் வாய்மொழியால் தாய்தந்தையை

வணங்கி வந்து அவர்கட்குப் பின் தமக்கையாரைத் தாயும் நீ தனித் தந்தையும் நீ என வணங்கிய வணக்கம் புலப்படுகின்றது.

அன்பர்களே இங்நிலை இக்காலத்தில் காண்டல் மிகவும் அரிது அரிது. இவ்விருவர் நல்லொழுக்கம் தாய் தந்தையரின் தகுதியை வெளிப்படுத்துகிறது. தக்கார் தகவிலர் என்பதவரவர் எச்சத்தாற் காணப்படும் என்பது பொய்யில் புலவர் வாக்கன்றோ? தம்பி வாழ்தற் பொருட்டு உயிர் தாங்க வேண்டி வந்த அம்மையார் மேற்கொண்ட ஒழுக்க நிலையை நமது தெய்வச் சேக்கிழார்,

தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருலகணைய உறுநிலைவிலக்க உயிர் தாங்கி
அம்பொன் மணிநூல் தாங்காதனைத் துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதியார் இருந்தார்.

அன்பர்களே தன் தம்பியார் பொருட்டு விண்ணுலக வாழ்க்கையை விடுத்து உயிர் தாங்கியும் அனைத்துயிர்க்கும் அருள் தாங்கியும் அம்பொன்மணி நூல் தாங்காது மனையின் கண்ணே செய்யப்படும் நோன்பு முதலிய பூசைகளைப் புரிந்தும் நடுப்பகல் ஒரு வேளையுணவுண்டுதலை சீவல் தாம்பூலம் தரித்தல் முதலியன நீத்து கையணையைத் தலையணையாகக்

கொண்டு தரையிற்றுயின்று சோமவார முதலிய விரதாதிகளால் உணவொழித்து இளைத்த யாக்கைய ராய்க் கடவுள் வழிபாடு செய்து வருபவராயினர். இத்தாபத நிலையைத் தோல்காப்பிய இலக்கண நூல் காதலன் இழுந்த தாபத நிலையெனக்கூறிக் காதலனை இழந்த மனைவி தவம் புரிந்தொழுகும் நிலையென விரித்துப் பேசும். திலகவதியாரும் மருணீக்கியாரும் இங்கனம் வாழ்ந்து வருவாராயினர் மருணீக்கி யார் தக்க வயது வந்த காலத்தில் செல்வம் நிலையா மையை குன்றத்தனையிரு நிதியைப் படைத்தோர் அன்றைப் பகலே அழியினும் அழிவர் அகடுறயார் மாட்டும் நில்லாது செல்வம் சகடக்கால் போலவரும் என்பதை அறிந்து ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியமில்லை உயிர்க்கு மேலுலகம் இல்லெனி னும் ஈதலே நன்றென்றோர்ந்து முன்னோர் வருந்தி யீட்டிய பொருளைக் கொண்டு விருந்தினர் வயிருகிய பேழையுள் வைத்துவருவர். ஆன்மா உய்யும் வழி கருதிச் சமயங்கள் பலவும் ஆய்ந்த அவர் நல்லாறு தெரிந்துணர்ந்து நம் பரருளாமையினல் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயங் குறுகினர். சைவ சமயத்தையும் தமக்கையாரையுந் திருவா மூவரையுங் கைவிட்டார் பாடலிபுரஞ்சென்று சமண் பள்ளியைச்

சார்ந்து அச்சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்து அங்குள்ள குருமார்கட்கெல்லாந் தலைமை யெய்தித் தருமசேனர் என்னும் பட்டப் பெயர் பெற்று விளங்கினர்.

சேனர் என்பது சமணர்க்குள் பட்டப்பெயரென்பதைத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில்,

சந்துசேனனு மிந்துசேனனுந் தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா
மந்திபோற்றி ரிந்தாரி யத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா
அந்தகர்க்கெளி யேனலேன் திருவாலவாய ரன்நிற்கவே.

எனக் கூறியுள்ளார்கள். தம்பி சமண் சமயம் புக்கபின் திலகவதியார் சிவபெருமான் திருவடிப்பேறெய்துவான் எழுந்த விருப்பால் திருவாமூரை நீங்கிச்,

சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு. என்ற பொய்யில் புலவர்.

பொன்மொழியைப் போற்றித் தாம் பற்றிய உலகப் பற்றினை விடற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றித் திருவதிகை விரட்டானஞ் சேர்ந்தனர்.

உயிருக்கு நல்லறிவு தவத்தால் வரும் என்ற சிவஞான போதம் எட்டாஞ் சூத்திரத்தின் பலனை புணர்ந்த அம்மையார் வீரட்டஞ் சேர்ந்து புலரியி லெழுந்து புனல்மூழ்கிப் புண்ணியர் பூசும் புனித வெண்ணீற்றை அணிந்து திருக்கோயில் திருவலகிடு தல் திருமெழுக்கிடல் திருமொக்கிடல் முதலிய செய்து வீணுக்குடலை சுமக்காது வில்வக்குடலையைச் சுமந்து துக்கக்குடலை மாத்திரஞ் சுமக்காமல் தும்பைக் குடலையுஞ் சுமந்து திருநந்தவனம் புக்கு மலர் கொய்து மாலை தொடுத்துப் பெருமான் திரு மேனிமேற் சாத்தி உன்னைச் சிங்காரித்து உன் அழ கைப் பாராமல் என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே. என்றில்லாமல் இறைவன் திருமேனி யைப் பூமாலையில் அழகுபடுத்திக் கண்டுகளித்து வருவாராயினர்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட் டெம்பெரு மாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

என்று பெருமான் சந்நிதியில் நின்று மனங்கசியப் பாடிச் சமணசமயம் புக்க தம்பியை நினைந்து நினைந்து மனம் புழுங்கி சைவ சமயமே சமயம் சைவமாஞ்

சமயஞ் சாரும் ஊழ்பெறலரிது. சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்கு நின்ருவியருதே யென்றுந் நீபெற அவ்வுரை கேளாதே உந்நீபெற. என்றபடி அரியசமயத்தைத் தம்பி இழந்தானே என்று வருந்தி இறைவன் திருமுன்,

தூண்டு தவவிளக்கனையார் சுடரொளியைத் தொழுதென்னை
ஆண்டருளி னீராகில் அடியேன் பின்வந்தவனை
ஈண்டு வினைப்பரசமயக் குழிநின்று மெடுத்தருள
வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால்

தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும் அவமொன்று பரசமயக் குழிநின்று தம்பியை எடுத்தருள வேண்டுமென்று பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனர்.

சிவனெனு நாமந்தனக் கேயுடைய செம்மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடுமாகில் அவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்து பன்னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழியா னென்றெதிர்ப்
படுமே.

பிறவியிற் சேர்க்கும் வினைகளையொழிக்கும் பெருமான் அம்மையார் விண்ணப்பத்திற்குத் திருச்செவி சாய்த்தருளி மன்னுதபோதனியார்க்குக் கனவின்கண் போந்தருளி நீ உன்னுடைய மனக்கவலையை ஒழி

உன்னுடன் பிறந்தான் முன்னமே முனியாகி எனை யடையத் தவம் புரிந்தான். அன்னவனை இனிச் சூலை நோய் கொடுத்தாள்வோம் எனத் திருவாய் மலர்ந் தருளித் திருவுருக்கரந்தனர்.

தருமசேனர் முற்செய்தவத்தினுங் குற்றஞ் சிறி துண்டு தாந்தா முன்செய்தவினை தாமே அனுபவித் தன்றித் தீராமையானும், ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும் என்றமையா னும் இறைவன் அவர்பால் சூலை நோயைச் செல்லத் திருவுளம் பற்றினர். அச்சூலைநோய் வடவனலுங் கொடுவிடமும்போல் தருமசேனர் வயிற்றில் புகுந்து குடையப் பள்ளியின்கண் மூர்ச்சித்து வீழ்ந்தனர் தன் தலைவர் நோயால் வருந்துதல் கண்ட சமணர். தந்திர மந்திர யந்திர முதலிய பல வழியானும் நோய் தீர்க்க முயன்றும், முடியாது கைவிட்டகன்றனர். அமணர் அகன்றமையும் நோய் வளர்ச்சியையும் அறிந்து வருந்தி வதையும் அந்நிலையில் தமக்கையார் ஒருவர் உளரெனுங் கருத்தெழ அவரிடத்துத் தம் நிலையை எடுத்துரைக்கச் சமைப்பவனைச் செலுத்தி னர். அவன் திருவதிகை வீரட்டஞ் சென்று திரு நந்தவனத்தினின்றும் வெளிவந்த திலகவதியாரை வணங்கி யான் உம் இளையவரேவலினல் பாடலி

புரத்தில் இருந்து வந்தேன் எனப் புகன்றனன். அம்மையார் தீங்குளவோவென வினவினார்கள். அதற்கு அவ் ஏவலன்,

கொல்லாது சூலைநோய் குடர்முடக்கித் தீராமை
எல்லாருங் கைவிட்டார் இதுசெயலென் முன்பிறந்த
நல்லாள்பால் சென்றியம்பி நானுய்யும் படிகேட்டிங்
கல்லாகும் பொழுதணைவாய் என்றானென் றறிவித்தான்.

என்றனன், கேட்ட அம்மையார் நன்றறியா அமண் பாழி நண்ணுகிலேம் எனும் மாற்றம் சென்றவனுக் குரையுமென மொழிந்தனர். பணியாளன் பாடலி புரஞ்சென்று மருணீக்கியார்பால் தபோதனியார் சொல்லிய வண்ணம் உரைத்தனன். மருணீக்கியார் கேட்டதும் இப்புன் சமயத்து ஒழியாத்துயர் ஒழியச் செவ்வாறு சேர் திலகவதியார் தாள் சேர்வன் என இறைவன் திருவருள் கூடுதலும் அயர்ச்சி யொதுங் கப் பீலிகுண்டிகை பாய் முதலிய அச்சமய அடை யாளங்களை ஒழித்து வெண்புடவை யணிந்து இருளிற் புறப்பட்டுச் சென்று திருவதிகையில் திலகவதியார் இருந்த திருமடத்தை யடைந்தனர். அடைந்தவர் அம்மையாரடிகளிற் பணிந்து "நமது குலஞ் செய்த நற்றவத்தின் பயன் அனையீர்! இந்தவுடல் கொடுஞ் சூலைக்கு அஞ்சி அடைந்தேன் இனி மயங்காது

உய்ந்து கரையேறும் நெறியை உரைத்தருளவேண்டு மென்றனர். திருமகளனையார்,

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ் சுடருருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு.

என்னும் உறுதியுடன் இறைவன் திருவருளை வியந்து கைதொழுது தம்பியை நோக்கி அறியாமையினால் பரசமயக் குழியில் விழுந்து அருந்துயருழந்தீர் எழுந் திரீர் இது நோயன்று இறைவன் திருவருளென்றறிக. பற்றலுப்பார் தலைப்பணிந்து பணி செய்க என்றனர் பின் திருவீரட்டப்புகுவதற்குத் தகுதியுடையராதற் குத் திருக்கயிலைக் குன்றுடையாரது திருவைந் தெழுத்தையோதி அவரது திருநீற்றைக் கொடுத்தனர். குருவாய் விளங்கும் அம்மை தந்த திருநீற்றை மரு ணீக்கியார் பணிந்தேற்று உருவார அணிந்து அவ ரோடு புறப்பட்டனர்.

திருவாளன் திருநீறு திலகவதி யாரளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவார அணிந்துதமக் குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தான்வந்தார்.

அம்மையாரளித்த திருநீற்றை இருகையாலும் ஏற்று ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள் என்னும் திருவாசகத்தின்படி மூத்தவர் தந்த திருநீற்றை இளையவர் சூலைநோயும் பிறவி நோயும் நீங்கும் அறிகுறியாகப் பெற்று பெருவாழ்வு வந்ததாக எண்ணி அணிந்தார்.

அணிந்த அவரே சிவாயநமவென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி என்று கூறுகின்றார். அணிந்து கொண்டபின் திருப்பள்ளி எழுச்சிக்குரிய காலஞ் சிறந்ததாகையால் ஆலயத்திற்கு முன்பு வந்தவர் முன்னும் பின் வந்த தம்பியார் பின்புமாகச் சென்று,

போற்றி யென்வாழ் முதலாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருண் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையா யெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

இத்திருப்பள்ளியெழுச்சியைப் பாடினர் அப்போது புற இருளைச் சூரியனும் மருணீக்கியார் மன

இருளை இறைவன் திருவருளும் நீக்குங் காலமாக இருந்ததென்று நந்தெய்வச் சேக்கிழார் கூறுகின்றனர்.

நீறணிந்தா ரகத்திருளு நிறைகங்குற் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி எழுச்சியினின் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகும் திருமெழுக்குந் தோண்டியுங்கொண்
டாறணிந்தார் கோயிலினுள் அடைந்தவரைக் கொடுபுக்கார்.

அம்மையார் தம்பியைத் திருக்கோயில் வலம் வருவித்துத் திருமுன்பணிவித்தனர். இறைவன் அருளால் அப்பெருமான் புகழைப் பாடும் உணர்வு தோன்ற,

"கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்குந் திருப்பதிகம் பாடினார் அத்திருப்பதிகம் எழுவகைப் பிறவியால் வருந்துன்பமும், எழுலகில் வருந் துன்பமும் நீங்கப் பாடப்பட்டது நோய் நீங்கியது சூலை நோய் வழித்தாகத் தாம் பெற்ற திருவருளை நினைந்து நோய்க்குச் செய்யுங் கைமாறில்லை யெனப் புகழ்ந்தார்

நல்ல திலகவதியார் மொழியை நம்பி வெந்நோய்
சொல்ல ரசர்தீர்ந் துய்ந்தார் சோமேசா

என்றனர் மாதவச் சிவஞான சுவாமிகள்.

அன்பர்களே அங்கிலேயில் திருவதிகை வீரட்டா னப் பெருமான் திருநாவுக்கரசரெனுந் திருநாமம் எழு லகினும் நிலைபெற்று விளங்கத் தீட்சாநாமமாக அச ரீரியாகச் சூட்டினர். நாயனர் கரைகாணு மகிழ்ச் சியில் திளைத்தார். சைவக் கொழுந்தாய் விளங்குந் திலகவதி யம்மையார் இறைவனுக்குப் பெருவிருப் போடு தொண்டு செய்தவன்மையால் தம் பின்வந்த தம்பிக்குச்செய்யும் நன்றியைச்செய்து முடித்தனர். பின் இறைவனை நோக்கி அம்மையார் கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை ஒரு பொருளாகக் கருதித் தேவரீர் திருவருளை வழங்கும் இத்திறம் யார் பெறுவார். யார் பெற்றனர் என்று இறைஞ்சி மகிழ்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்து முத்தி யடைந்தனர். இவ்வாறு திருத்தொண்டர் புராணத் தில் திலகவதியார் பெருமை எடுத்து ஓதப்பெறு கின்றது. நம் திருநாவுக்கரசராகிய பரமாசாரியரை நமக்குதவி என்போன்ற பெண்ணுலகிற்குப் பெரு மையளித்த திலகவதியம்மையாரைப்பரவி அடியேன் சொற்பொழிவை முடித்துக்கொள்ளுகிறேன். பிழை பொறுத்து ஆசிர்வதிக்கப் புனிதர் பேரவையை வேண்டுகிறேன்.

சுபம்!

இந்நூல் அச்சிடப் பொருள் அளித்த

திரு. வெ. கந்தசாமி முதலியார்

அவர்களுக்கு

## வாழ்த்துரை

நேரிசை வெண்பா.

அம்மை திலகவதி யார்சரித மச்சியற்றச்
செம்மைப் பொருளளித்த செல்வன்றன் நன்மையுளங்
கூர்கந்த சாமிக் குரிசிலுமை கோனருளால்
சீர்கொண்டு வாழ்க சிறந்து.

குகன் பிரஸ், காஞ்சிபுரம். Q. H. Ct. 20.

அன்பர்களே!

இப்பாடசாலையின் நோக்கம் மாணவர் மாணவிகளுக்கு தமிழ்க் கல்வியைக் கற்பித்துப் பேரவையில் விரிவுரை யாற்றப் பழக்கி அறநெறியில் ஒழுகச் செய்தல். சைவ சமயாசாரிய சந்தானாசாரியர்களின் திருவருள் நெறியைப் பரவச் செய்தல் அடியிற் குறித்த நூல்களின் மூலத்தை மனப்பாடஞ் செய்து ஒப்புவிப்பவர்கட்குக் கீழ்குறித்த புத்தகமும் பரிசும் அளித்தல்.

பரிசில் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஆத்திசூடி .... .... | 0 | 1 | 0 |
| கொன்றைவேந்தன் .... | 0 | 1 | 0 |
| ...ந்தொகை .... .... | 0 | 2 | 0 |
| ...ரை, நல்வழி இரண்டிற்கும் .... | 0 | 4 | 0 |
| ...குறள், அதிகாரம் ஒன்றுக்கு | 0 | ௨ | 0 |
| ... உரை நடை | 3 | 0 | 0 |

...ான். குமார சுவாமியடிகள்,
மெய்கண்டார் கழக ஆசிரியர்,
காஞ்சிபுரம்.